க.பொ.த (உ/த)

1931

டொனமூர் அரசியல் சீர்திருத்தம்





Mr. P.T. Mohamed Ameen
BA, PGDE (Merit) , SLTS

1931 டொனமூர் அரசியல் சீர்திருத்தம்

பின்னணி

- ❖ 1924 ஆம் ஆண்டு யாப்பு பல்வேறு குறைபாடுகளைக் கொண்டிருந்தமை
- ❖ அரசியல் சீர்திருத்தம் ஒன்று வேண்டும் என்ற இலங்கையர் தொடர்ச்சியான கோரிக்கைகளை முன்வைத்தமை
- ❖ பல நிர்ப்பந்தங்கள்
  1. இந்தியா சுதந்திரப் போராட்டத்தின் தாக்கம்
  2. இலங்கையில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சி
  3. பிரித்தானிய தொழிற்சட்சி அதிகாரத்துக்கு வந்தமை போன்ற காரணிகள் மூலம்

இச்சீர்திருத்தத்தை மாற்ற வேண்டும் என்று அறிந்து கொண்ட தேசாதிபதி இதுசம்மந்தமான சிபாரிசுகளை முன்வைப்பதற்கு ஒரு குழுவை முன்வைக்குமாறு பிரித்தானிய அரசாங்கத்தை வேண்டிக்கொண்டார்.

இதன்படி 1927.11.13 ஆம் திகதி டொனமூர் குழுவினர் இலங்கையை வந்தடைந்தனர். இவர்கள் இலங்கையில் சுமார் ஒருவருடகாலம் தங்கியிருந்து பல மக்களையும் மக்கள் குழுவையும் சங்கங்களையும் மற்றும் அக்காலத்திலிருந்த அரசியல் அங்கத்தவர்களையும் சந்தித்து பேசி புதியதோர் அரசியல் திட்டத்தினை முன்வைத்தார்கள்.

இவ்வரியல் சீர்திருத்தம் 1931 இல் நடைமுறைக்கு வந்தது.

டொனமூர் சீர்திருத்ததின் முக்கிய அம்சங்கள்

01 அரசாங்க சபை / அரசுக்கழகம்

02 சர்வசன வாக்குரிமை

03 பிரதேசவாதிப் பிரதிநிதித்துவம்

04 நிர்வாகக் குழுமுறை

05 மந்திரிசபை / அமைச்சரவை

06 தேசாதிபதி

07 மூன்று காரியதரிசிகள்

08 பொதுச்சேவை, நீதிச் சேவை ஆணைக்குழுக்கள்

அரசாங்க சபை / அரசுக்கழகம்

- ✓ டொனமூர் அரசியல் யாப்பில் மிகப் பிரதானமான ஒன்றாக அரசாங்க சபை காணப்பட்டது. இது சட்டம் , நிர்வாகம் ஆகிய இரண்டு கடமைகளையும் நிறைவேற்றக் கூடியதாக இருந்தது.
- ✓ அரசாங்க சபைக்குத் தேவையான சட்டங்களை ஆக்குவதற்கும் அதே போன்று நிர்வாகத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் இரு வேறுபட்ட நேரங்களில் கூடியது.
- ✓ இச்சபையானது சட்டங்களை இயற்றவும் அதனை நிறைவேற்றவும் சிறப்புப் பெற்று விளங்கியது.
- ✓ **இதன் பதவி காலம் 5 வருடங்களாகும்**

- ✓ அரசாங்க சபையானது **61** உறுப்பினர்களைக் கொண்டமைந்தது.
- ✓ இவர்களுள் **50** பேர் சர்வசன வாக்குரிமை மூலம் தேர்தல் தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்படடனர்.
- ✓ இவர்கள் **5** வருடத்துக்கு ஒரு முறை நடைபெறும் பொதுத் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.
- ✓ 8 பேர் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக தேசாதிபதியினால் நியமிக்கப்பட்டனர்.

  ஐரோப்பியர் 4
  பறங்கியர் 2
  மலே 1
  இந்திய வர்த்தக வகுப்பைச் சார்ந்தவர் 1

- ✓ மூன்று காரியதரிசிகள் நியமிக்கப்பட்டனர்.
  1. பிரதம காரியதரிசி
  2. சட்டத்துறை காரியதரிசி
  3. நிதிக் காரியதரிசி

  இம்மூன்று காரியதரிசிகளுக்கும் சபையில் ஆலோசனை கூறுவதற்கு அனுமதி கொடுக்கப்பட்டது மாறாக வாக்களிப்பதற்கு உரிமை இருக்கவில்லை.

- ✓ பொதுத் தேர்தலைத் தொடர்ந்து நடைபெறும் கூட்டத்தொடரில் அரசாங்கசபையின் தலைவரும் உபதலைவரும் தெரிவு செய்யப்படுவார். இவர்களை சபாநாயகர், உதவி சபாநாயகர் என அழைக்கப்படுகின்றது.

  முதலாவது சபாநயகர் - **பிரான்சிஸ் மொலமூரே**

ameen.ptm

அரசாங்க சபையின் செயற்பாடுகள்

அரசாங்கசபையின் பிரதான அதிகாரம் சட்டங்களை ஆக்குவதாகும். இதில் நாட்டுக்குத் தேவையான சட்டங்கள் ஆக்கக்கூடிய அதிகாரங்கள் காணப்பட்டன.

மக்களின் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் ஓரளவு சுதந்திர தன்மையுடன் மக்களுக்குத் தேவையான சட்டங்களை இயற்ற வாய்ப்பளிக்கப்பட்டது.
எனினும் அரசாங்க சபை சட்டங்களை இயற்றுவதற்கு பூரண சுதந்திரம் காணப்பட்ட ஒரு சபை எனக் கூற முடியாது.

அரசாங்க சபை சட்டங்களை ஆக்கும் போது பல தடைகள் இருந்தன.

- தேசாதிபதி சட்டங்களுக்கு சம்மதம் அளித்து கையெழுத்திடல்.
- அவசரகால நிலமையின் போது சட்ட ஆக்க அதிகாரத்தை தேசாதிபதியே எடுத்துக்கொள்ளல்.
- தேசாதிபதி அரசாங்க சபையின் அனுமதியுடன் தனது சட்டங்களை இயற்றக்கூடியதாக இருத்தல்.
- டொனமூர் அரசியல் சீர்திருத்தத்துக்கு எதிராக சட்டம் இயற்ற முடியாது இருத்தல்.
- பிரித்தானிய நடவடிக்கைகளுக்கு எதிராக சட்டம் இயற்ற முடியாது இருத்தல்.

எனினும் மக்கள் பிரதிநிதிகள் அரசாங்கத்தின் சட்டவாக்க நடவடிக்கைகளுக்கு பங்குபற்ற வாய்ப்புக் கிடைத்தமையானது ஒரு முன்னேற்றகரமான செயற்பாடாகும்.

அரசாங்க சபை உறுப்பினர்கள் 7 குழுக்காளாகப் பிரிந்து நிர்வாக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

அரசாங்க சபைக்கு நிறைவேற்று அதிகாரமும் காணப்பட்டது இவ்வதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கசபை வேறாக நடாத்தப்பட வேண்டும்.

நிர்வாக நடவடிக்கைகள் நிறைவேற்றுக் குழுக்கள் எடுக்கும் தீர்மானங்களை சம்மந்தப்பட்ட அமைச்சர் அரசாங்க சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அரசாங்க சபை அதனை ஆலோசித்து முடிவு செய்ய வேண்டும்.

ameen.ptm

நன்மைகள்

- ❖ முன்னர் காணப்பட்ட சட்டசபைகளை விட இவ்வரசாங்க சபை இறைமை படைத்ததாகக் காணப்பட்டது.
- ❖ சபை நடவடிக்கைகள் சபாநாயகரின் கட்டுப்பாட்டுக்குள் செயற்படக்கூடிய நிலை தோற்றம் பெற்றது.
- ❖ அரசாங்க சபை உறுப்பினர்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கு அச்சபை அவர்களுக்கு பூரண சுதந்திரம் கொடுத்தது.
- ❖ அரசியல்ரீதியான கொள்கைகளைச் செயற்படுத்துவதற்கு அறிவு, சிந்தனை செய்கின்ற மனநிலை, நாளுக்குநாள் ஏற்படுகின்ற பிரச்சினைகளை சமாளிப்பதற்குத் தேவையான பயிற்சிகளை இச்சபை வழங்கியது.
- ❖ பொறுப்புடன் கூடிய அதிகாரத்தை வழங்கி ஆட்சி முறையில் அறிவு சார்ந்த அரசியல் வளர்ச்சிக்கு ஒருங்கிணைந்து செயற்பட வாய்ப்பளித்தது.
- ❖ மக்களால் தெரிவு செய்யப்பட்டோருக்கு அரசுக்கழகத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டது.

குறைபாடுகள்

- ❖ முஸ்லிம்கள் மற்றும் இந்திய வம்சவழிகள் போன்ற சிறுபான்மையினர் தமது விகிதாசாரத்துக்கு ஏற்ற அங்கத்துவர்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.
- ❖ அரசாங்க சபையின் தலைவராக ஒரு சிறுபான்மை உறுப்பினர் வருவதற்கு சந்தர்ப்பம் குறைவாக காணப்பட்டது இருப்பினும் விதிவிலக்காக 1936 இல் சேர் வைத்திலிங்கம் துரைசாமி தெரிவுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.
- ❖ பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ முறை மூலம் அரசாங் சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதானால் சிறுபான்மையினரின் அங்கத்துவம் குறைவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் சட்டாக்க அதிகாரத்தில் சிறுபான்மையினர் புறம் தள்ளப்பட வேண்டிய நிலை காணப்பட்டது.
- ❖ சட்டாக்க அதிகாரத்தில் போதியளவு இறைமை காணப்பட வில்லை எனலாம் ஏன்எனில் அரசாங்கை சபையால் உருவாக்கப்படும் சட்டங்களுக்கு தேசதிபதி கையொப்பம் இடுதல், நிராகரிக்கும் உரிமை காணப்படுதல், அவசரகாலங்களில் சட்டாக்க அதிகாரத்தை தேசாதிபதி தானே பொறுப்பாக இருத்தல்,
- ❖ டொனமூர் அரசியல் திட்டத்துக்கு எதிராகவும் பிரித்தானிய அரசாங்க நடவடிக்கைகளுக்கு எதிராகவும் சட்டங்களை ஆக்க முடியாதிருத்தல்.
- ❖ தேசாதிபதி அரசாங்க சபையின் அனுமதியுடன் தானே சட்டங்களை இயற்றுதல்.
- ❖ அரசாங்க சபையின் சட்ட அதிகாரத்துக்கு தேசாதிபதி தடையாக இருத்தல்.

ameen.ptm

02 சர்வசன வாக்குரிமை

- சர்வசனவாக்குரிமை டொனமூர் ஆணைக்குழுவால் முன்வைக்கப்பட்ட முக்கியமான ஒரு சிபாரிசாகும்
- இதன்படி 21 வயதை அடைந்த இலங்கை மக்கள் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டது.
- குறிப்பாக ஆண்,பெண் அனைவருக்கும் இனம், மதம், மொழி வேறுபாடின்றி வாக்குரிமை வழங்கப்பட்டது.
- சர்வசன வாக்குரிமை பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் இலங்கைக்கே முதன்முதலில் வழங்கப்பட்டது.
- சர்வசனவாக்குரிமை வழங்குவதனை பல அரசியல் தலைவர்கள் எதிர்த்த போதும் கூட டொனமூர் குழு அனைவருக்கும் வழங்கியது ஒரு சிறப்பான செயலாகும்.

இவ் விதப்புரைக்கு அடிப்படையாக அமைந்த காரணிகள்

- கல்வித் தகைமையை அடிப்படையாகக் கொண்டு கற்றவர்களுக்கு மட்டும் வழங்கப்படும் வாக்குரிமை முறை தவறானது.
- மக்கள் அனைவரும் பொறுப்புணர்சியுடன் ஆட்சியில் பங்கெடுப்பதன் மூலம் அவர்கள் மத்தியில் அரசியல் அறிவும் அக்கறையும் வளர்ச்சிடையும்.
- வறுமை நிலையில் பின்தங்கியிருக்கும் மக்கள் குழுவை அரசியல் ரீதியாகப் பலப்படுத்தி அவர்களுக்கு அபிவிருத்தியை பெற்றுக்கொடுத்தல்.
- கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் இடையிலான சமமற்ற அபிவிருத்திகளை இல்லாது ஒழித்தல்.
  அதாவது இலங்கையில் பொது நிர்வாகம் சமமற்ற முறைகளில் காணப்பட்டது. நகரங்களில் காணப்பட்ட வளர்ச்சியை கிராமங்களில் காண முடியவில்லை. இம்முரண்பாட்டை இல்லாமல் செய்யவே வாக்குரிமை வழங்கப்பட்டது.
- வரையறுக்கப்பட்ட வாக்குரிமையின் கீழ் இடம்பெற்ற உயர்குழாம் வகுப்பினரின் சில்லோரி அரசியல் உரிமைகளை இல்லாது ஒழித்தல்.
- இந்திய சுதந்திரப் போராட்டத்தின் தாக்கம் இலங்கையிலும் காணப்பட்டது. இலங்கை மக்கள் அப்போராட்டத்தில் ஈடுபடுவதனை தவிர்ப்பதற்காக அரசியலில் அவர்களை உள்வாங்க வேண்டியிருந்தது.
- இக்காலத்தில் பிரித்தானியாவில் தொழிற்கட்சி ஆட்சியில் இருந்ததனால் அது சர்வசனவாக்குரிமையை ஆதரவாக பார்த்தது.
- இலங்கை அரசியலில் சமத்துவம் முற்றாக உணரப்படாததன் காரணமாக மக்களின் பெரும்பகுதியினருக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டிய பொறுப்பு காணப்பட்டது

ameen.pm

டொனமூர் குழுவினர் சர்வசனவாக்குரிமையை வழங்க முன்வந்த போது A.E. குணசிங்கவைத் தவிர ஏனைய அரசியல் தலைவர்கள் இதனை கடுமையாக எதிர்த்தனர்.

அவர்கள் எதிர்த்தமைக்கான காரணங்கள்

- வாக்குரிமை விரிவடைந்து செல்லும் போது இலஞ்சம் , ஊழல் என்பன அதிகரிக்கும்.
- சொத்துடையவர்களே நாட்டுப்பற்றுடையவர்களாக இருப்பார்கள் எனவே அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும்.
- கல்வியறிவு அற்றவர்களுக்கு வாக்குரிமை வழங்கினால் அவர்கள் அதனை தவறான வழிகளில் பயன்படுத்த முயற்சிப்பார். எனவேதான் கல்வியறிவு படைத்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டும்.
- பெண்கள் அரசியலில் ஈடுபாடு அற்றவர்கள் எனவே அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்படக்கூடாது.
- வாக்குரிமை 25 வயதுக்கு மேற்பட்டடோருக்கே வழங்கப்பட வேண்டும்.

மேற்கூறிய காரணங்கள் நிராகரிகக்ப்பட்டு அவை ஒவ்வொன்றுக்குமான நியாயங்களை டொனமூர் குழு முன்வைத்தது.

- பிரித்தானிய அரசியல் வரலாற்றில் வாக்குரிமை விஸ்தரிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் ஊழல் குறைந்து வந்து அருகிப்போனது. மேலும் வாக்குரிமையை உபயோகிப்பதன் மூலம் அரசியல் அறிவு மக்களிடையே வளரும்.

- சொத்துக்கள் உடையோர் நாட்டுப்பற்றுடையோர் எனக் கூற முடியாது சொத்துக்கள் அற்றவர்களும் நாட்டுப்பற்றுடையவர்களாக உள்ளனர்.

- கல்வியறிவு அற்றவர்களில் புத்திக்கூர்மையானவர்களும் உள்ளனர். அவர்கள் வாக்குரிமையை தவறாக பயன்படுத்துவார் எனக் கூறமுடியாது. கல்வியறிவு பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் போனது அவர்களது பிழையல்ல அது அரசாங்கத்தின் பிழை வாக்குரிமை விரிவடையும் போது கல்வியிலும் அபிவருத்தி ஏற்படும்.
- பெண்களுக்கென தனியான பிரச்சினைகள் உள்ளன. ஆண் பெண் சமத்துவத்துக்கு அப்பால் இப்பிரச்சினைகளின் தாக்கம் முக்கியமானவையாகும். குழந்தைகள் இறப்புவீதம், குழந்தைகள் நலன், பெண்களுக்கான மருத்துவம், கற்பிணிகளுக்கான உதவி போன்றவற்றில் அரசின் கவனம் செல்ல வேண்டும்.

- 21 வயதையடைந்த ஒருவர் முதிர்ச்சியடைந்து வாழ்க்கைக் கடமைகளை ஏற்றுக்கொள்ள தகுதியுடையவராக இருப்பார் என்று உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் 21 வயதைடைந்தவர்கள் ஏற்கனவே வாக்குரிமை பெற்றிருந்தனர்.

ameen.ptm

மேற்கூறிய காரணங்களை முன்வைத்து இலங்கை அரசியல் தலைவர்களின் காரணங்களை நிராகரித்து மேலும் இரண்டு காரணங்களை சுட்டிக்காட்டினர்.

- இலங்கையில் சாதியால் தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களின் வாழ்க்கைச் சூழல் மிக மோசமானதாகவும் துன்பகரமானதாகவும் காணப்படுகிறது. இவர்கள் தங்கள் துன்ங்பங்களிலிருந்து நீங்கி குடிமக்களோடு சேர்ந்து வாழ வேண்டுமாயின் அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட வேண்டியது அவசியமாகும்.

- மன்னரின் அரசாங்கம் இலங்கையிலுள்ள உயர்குழாம் வகுப்பினருக்கு மட்டுமில்லை இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் சொந்தமானது. எனவே பொறுப்பாட்சியை ஒப்படைக்கும் போது வாக்குரிமை பெற்ற 4 வீதமான உயர்குழாம் வகுப்பினரிடையே ஒப்படைக்க முடியாது இதை மாற்ற இருக்கும் ஒரே ஒரு வழி சர்வசன வாக்குரிமையாகும்.

மேற்கூறிய நியாயங்களைக் கூறி இலங்கை மக்களுக்கு சர்வசன வாக்குரிமையை டொனமூர் குழு சிபாரிசு செய்த போதும் இந்திய வம்சவழிகளுக்கு வாக்குரிமை வழங்குவதில் சிங்கள உயர்குழாமினருக்கிடையே முக்கிய பிரச்சினைகள் தோன்றியது இதனால் டொனமூர் அரசியல் திட்டத்தை இலங்கை மக்கள் ஏற்காமல் போவார்கள் என்ற பயத்தினால் டொனமூர் குழு சில் முக்கிய விட்டுக்கொடுப்பை செய்தது.

இதனால்

- இலங்கையில் வாக்குரிமை பெறுவோர் 5 வருடங்கள் தொடர்ச்சியாக இலங்கையிலே வசித்தவராக இருத்தல் வேண்டும் என விதித்தது.

சர்வசன வாக்குரிமையின் விளைவுகள்

- சர்வசன வாக்குரிமையால் பிரதிநிதித்துவ ஜனநாயகத்துக்கு மக்கள் பழக்கப்பட்டனர். இதனால் தேர்தல் மூலம் தங்களது ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கவும் மாற்றியமைக்கவும் இலங்கை மக்கள் பழகிக் கொண்டனர்.

- அரசியல் அதிகாரத்தை பிரயோகிப்பவர்கள் மக்களுக்குப் பொறுப்புக் கூற கடமைப்பட்டனர். அரசியல்வாதி தாம் அளித்த வாக்குறுதிகளை பொறுப்புடன் நிறைவேற்றா விடின் மக்களின் ஒத்துழைப்பு தமக்கு கிடைக்காது என்ற விடயத்தை அடிப்படையாகக் கொண்டு பொறுப்புடன் கூடிய அரசாங்கத்துக்கு பழகிக் கொண்டனர்.

- டொனமூர் அரசியல் திட்டத்தை நடைமுறைப்படுத்த அரசியல் கட்சிகள் தேவைப்பட வில்லை இவ்வரசியல் திட்டம் கட்சிகளின் தோற்றத்தை ஊக்குவிக்கவும் இல்லை. ஆனால் சர்வசன வாக்குரிமையை மையமாகக் கொண்டு வாக்காளர்களை ஒழுங்குபடுத்துவதற்கான தேவையை மையப்படுத்தி அரசியல் கட்சிகள் தோற்றம் பெற்றன.
  - ✓ லங்கா சமசாமாஜ கட்சி (1935)
  - ✓ இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (1943)

❖ சர்வசன வாக்குரிமை மூலம் மக்கள் வலுப்பெற்றனர்.

❖ மக்கள் நலன்பேண் பல நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

- ✓ இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.
- ✓ தாய்மொழி போதனா மொழியாக ஆக்கப்பட்டது.
- ✓ இலவச மருத்துவம்
- ✓ விவசாய மானியம் வழங்கப்பட்டது.
- ✓ உணவு மானியம் வழங்கப்பட்டது.
- ✓ விவசாய குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

❖ தொழிலாளர் நலன்பேண் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டன.

- ✓ தொழிலாளர் நட்டயீட்டு கட்டளைச் சட்டம் (1934)
- ✓ சம்பள கட்டளைச் சட்டம்(1941)

❖ **சாதாரண மக்களின் அரசியல் அறிவு வளர்ச்சியடைந்தமை.** அதாவது சர்வசன வாக்குரிமை மூலம் அரசியலில் பங்குபெற வாய்ப்பு ஏற்பட்டது. வேட்பாளர்கள் மக்களிடையே மேற்கொள்ளும் பிரச்சாரம் மூலம் மக்கள் வேட்பாளர்களை நோக்கி கேள்விகளை கேட்கத் தொடங்கினர். இத்தகைய செயற்பாட்டால் மக்கள் இயல்பாகவே அரசியல் அறிவைப் பெற்றனர்.

❖ **சாதாரண மக்களும் அவர்களின் பிரச்சினைகளும் அரசியல் அரங்கிற்கு கொண்டுவரப்பட்டன.** அந்த வகையில் பிரதிநிதிகளுக்கு சாதாராண மக்களின் தேவைகள் காணப்பட்டதனால் அரசியல் அரங்கிற்கு மக்களின் பிரச்சினைகளைக் கொண்டுவந்தனர். அரசாங்க சபை , நிர்வாகக்குழு, மந்திரிசபை போன்றவற்றில் சாதாரண மக்களின் பிரச்சினைகள் பேசப்பட்டன.

❖ **தொழிற்சங்கங்கள் வளர்ச்சியடைந்தமை** சர்வசன வாக்குரிமையைத் தொடர்ந்து தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காக தொழிலாளர் நலன்பேண் பல சட்டங்கள் இயற்றப்பட்டன. இவ்வகையில் தொழிற்சங்கங்களை தொழிலாளர்கள் அமைத்துக்கொள்ள சட்டரீதியான உரிமை வழங்கப்பட்டது

- ✓ இந்திய காங்கிரஸ் தொழிற்சங்கம்
  (பிற்காலத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸாக மாற்றப்பட்டது.)

❖ **பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு மக்கள் பழக்கப்படுதல்.** சர்வசன வாக்குரிமை மூலம் மக்கள் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்யவும் நீக்குவதற்கும் பழக்கப்பட்டனர். தமக்காக பணியாற்றக்கூடிய பிரதிநிதிகளை மக்கள் தெரிவு செய்தனர். தெரிவு செய்த பின்னர் மக்களுக்காக பணியாற்றாதரவர்களை பிரதிநிதித்துவத்திலிருந்து அகற்றினர்.

❖ **சமூகமாற்றம் துரிதமடைதல்**

பின்தங்கிய மக்கள் பிரிவினர் சர்வகசன வாக்குரிமை மூலம் அரசியல் பலத்தைப் பெற்றனர். இப்பலம் அவர்களை மேல்நிலையில் கொண்டுவருதவற்கு உதவியது. மரபுரீதியான ஒடுக்கு முறைகள் ,சாதி முறைகள் என்பன ஒழிக்கப்பட்டன.

ameen.ptm

சர்வசன வாக்குரிமை மூலம் பாதகமான விளைவுகளும் ஏற்பட்டன.

- ❖ பொருளாதாரத்தில் சமத்துவம் இல்லாமல் சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது ஆனால் இது சாதாரண மக்களை விட பொருளாதார பலம் படைத்தவர்களுக்கே சாதகமாக அமைந்தது. சாதாரண மக்களால் அரசியல் உரிமைகளை அனுபவிக்க முடியாத நிலை காணப்பட்டது.
- ❖ சர்வசன வாக்குரிமை அரசியல் அதிகாரத்தின் இருப்பிடத்தில் எந்த மாற்றங்களையும் ஏற்படுத்த வில்லை மாறான அதிகாரம் சொத்துடையவர்களின் கைகளிலேயே காணப்பட்டது.
- ❖ சர்வசன வாக்குரிமையானது சிறுபான்மை மக்களை பொறுத்தவரையில் பாதகமாக அமைந்தது. அதிகாரம் தொடர்ந்து பெரும்பான்மையோரது கைகளிலேயே தங்கியிருந்தது. இதனால் சிறுபான்மை இனங்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது.

ameen.ptm

03 பிரதேசவாதிப் பிரதிநிதித்துவம்

- ❖ கோல்புறுக் அரசியல் சீர்திருதத்தில் பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அங்கு இனவாரிப் பிரதிநிதித்துவமே காணப்பட்டது.
- ❖ டொனமூர் சீர்திருத்தத்தின் மூலம் இன, மத, மொழி ரீதியான பிரதிநிதித்துவம் இல்லாது ஒழிக்கப்பட்டு பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமுறை அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ இப்பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தின் படி இலங்கை 50 தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பட்டது.
- ❖ இதன் படி 50 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.
- ❖ 5 வருடத்துக்கு ஒரு முறை தேர்தல் தொகுதிகளில் நடைபெறும் பொதுத் தேர்தலின் மூலம் ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றவர் அரசாங்க சபையின் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்துவதற்கான காரணங்கள்

- ❖ சிறுபான்மை இனத்தவர்கள் இதற்கு எதிராக கருத்துக்களைத் தெரிவித்தனர் குறிப்பாக பிரதேசவாரிப் பிரதநிதித்துவத்தின் மூலம் தங்களது பிரதிநிதித்துவம் குறைந்துவிடும் என்ற கருத்தை முன்வைத்தனர்.
- ❖ இவர்களது கருத்துக்களை ஏற்றுக்கொண்ட டொனமூர் குழு பிரதேசவாரிப் பிரதிநித்துவத்தை அறிமுகப்படுத்துவதற்கு பின்வரும் நியாயங்களை முன்வைத்தது.
  - ✓ இனவாரிப் பிரதிநிதித்துவம் மிக மோசமானது அது நாட்டு மக்களின் திறமைகளையும் ஆற்றல்களையும் அதே போன்று தேசிய ஒற்றமையையும் இல்லாது ஒழித்துவிடும்.
  - ✓ ஒவ்வொரு பிரதிநிதித்துவமும் தமது இனத்தின் நன்மைக்காகவே உழைக்கும்.
  - ✓ சிறுபான்மை மக்களுக்கு ஒரு நாட்டில் அவர்களது சமூக உரிமைகளை இனவாரி பிரதிநிதித்துவம் மூலம் மட்டும் கொடுத்துவிட முடியாது. பெரும்பான்மை இனத்தவர்களிடையே உள்ள நட்பு, நம்பிக்கை மூலம் இவற்றை பாதுகாக்க முடியும்.
  - ✓ அரசாங்க சபையில் சிறுபான்மைக்கு எதிராக பெரும்பான்மை சட்டம் இயற்றும் போது தேசாதிபதிக்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி தடுக்க முடியும்
  - ✓ பிரதேசவாரி பிரதிநிதித்துவம் மூலம் உறுப்பினர்களை அனுப்ப முடியாத சிறுபான்மை இனத்தவர்களுக்கு நியமன உறுப்பினர் வழங்கப்படும்

ameen.ptm

பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தின் நன்மைகள்

- மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான உறவு அதிகரித்தது
- பிரதேச ரீதியாக பிரதிநித்துவம் வழங்கப்பட்டதனால் எல்லா பிரதேசங்களும் அபிவிருத்தியடைய வாய்ப்பு ஏற்பட்டது.
- இம்முறையால் பல்வேறு பிரததேசங்ளின் பிரச்சினைகளும் அரசியல் கருத்துக்களும் அரசாங்க சபைக்கு கொண்டுவரப்பட்டது.
- அரசியல்வாதிக்கும் மக்களுக்கும் இடையிலான உறவு பலப்படுத்தப்பட்டது.

பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தின் தீமைகள்

- இனப்பிரச்சினைகள் தோன்றுவதற்குக் காரணமாக அமைந்தது.
- இம்முறை மூலம் பெரும்பான்மை இனத்தவரின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கச் செய்தது மாத்திரமன்றி அரசியல் அதிகாரம் பெரும்பான்மையினரின் கைகளிலேயே சுழன்றது.
- இப்பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறை மூலம் தேர்தல் தொகுதிகளாக பிரிக்கப்பட்ட போது சிறுபான்மை இனத்தவரின் விகதாசாரத்திற்கு ஏற்ப ஒரு பிரதிநிதித்துவத்தையாவது பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ameen.ptm

நிர்வாகக் குழுமுறை அறிமுகப்படுத்தியதற்கான காரணங்கள்

- பிரித்தானியாவில் இந்நிர்வாக முறைமை நடைமுறையில் இருந்தமை.
- இலங்கையில் அரசியல் தலைவர்களை நிர்வாகத்தில் பங்குபெறச் செய்தல் மூலம் நிர்வாக பயிற்சிகளை பெறவைத்தல்.
- நிர்வாக நடவடிக்கைகளில் எல்லா இனங்களையும் பங்குபெறச் செய்தல்.
- அரசியல் கட்சி முறை நடைமுறையில் இல்லாமை.

நிர்வாகக் குழு முறையின் பிரதான அம்சங்கள்

- டொனமூர் சீர்திருத்தத்தில் மிக முக்கியமானது நிர்வாகக் குழு முறையாகும்.
- மந்திரி சபைக்குப் பதிலாக இம்முறை ஏற்படுத்தப்பட்டது.
- இதில் அரசாங்க சபையில் காணப்பட்ட 61 உறுப்பினர்களில் 3 காரியதரிசிகளையும் சபாநாயகரையும் தவிர்த்து ஏனைய 57 உறுப்பினர்களும் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்பட்டனர்.
- பெரும்பாலும் 8 அங்கத்தவர்களைக் கொண்டதாக காணப்பட்டது.
- 7 குழுக்களாக பிரிக்கப்பட்டது.
- இக்குழுவில் குறைந்தது 6 உறுப்பினர்களும் கூடியது 9 உறுப்பினர்களும் காணப்பட வேண்டும் என்று அரசியல் அமைப்ப குறிப்பிடுகிறது.

- இவ் **7 நிர்வாகக் குழுக்களும்**

1. உள்நாட்டு விவகாரம்
2. விவசாயமும் காணியும்
3. பொதுநிர்வாகம்
4. உள்ளூராட்சி
5. கல்வி
6. சுகாதாரம்
7. தொழில்

- ஒவ்வொரு நிர்வாகக்குழுவும் தனித்தனியாகக் கூடிய தமது தலைவரை தெரிவு செய்யும். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர் **மந்திரி** என அழைக்கப்படுவார்.

ameen.ptm

நிர்வாகக் குழுமுறையின் பணிகள்

- நிர்வாகக் குழுவானது தமது குழுவை மேற்பார்வை செய்வதுடன் அதனைக் கட்டுப்படுத்தும் வேலைகளையும் செய்யும்.
- நிர்வாகக் குழுவுக்கு தொடர்பான துறைகளில் ஓராண்டுக்குத் தேவையான திட்டங்களைத் தயாரித்தல்.
- தமது துறைகளின் செலவீனங்களை செப்பனிடுதல்.
- திணைக்களங்களில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களை நியமிப்பதும் அதற்கு ஆலோசனை வழங்குவதும்.
- நிர்வாகக் குழுவின் பிரதான கடமை தமது துறைகளின் தேவைகளை இனங்கண்டு கொள்வதும் அதனை தீர்மானமாக நிறைவேற்றுவதுமாகும்.
- தமது துறைக்கான வரவு செலவு திட்டங்களை தயாரித்தல்
- வேலைகளை ஒப்படைக்கும் இலாகாக்களை மேற்பார்வை செய்தல்

போன்ற கடமைகளை மேற்கொள்ளும்

நிர்வாகக் குழுமுறையின் நன்மைகள்

- இக்குழுவில் காணப்பட்ட இலங்கை அரசியல் தலைவர்களுக்கு அரசியல் அனுபவம் பயிற்சி என்பன பெறுவதற்கு வாய்ப்பாக அமைந்தது. இதில் பயிற்சி பெற்ற தலைவர்கள் பிற்காலத்தில் நாட்டின் தலைவர்களாக இருந்தமை

  உ + ம் D.S சேனாநாயக்க – விவசாய அமைச்சராக இருந்து

  பிற்காலத்தில் இலங்கையின் முதலாவது பிரதமராக வந்தமை குறிப்பிடத்தக்கது.

- அரசாங்க சபை உறுப்பினர்கள் அனைவரும் நிர்வாகத்தில் பங்குபெற வாய்ப்புக் கிடைத்தது.
- மந்திரி சபை ஆட்சிமுறைக்கு வழிகாட்டியாக இருந்தது.
- சிறுபான்மை இனத்தவர்களும் நிர்வாகத்தில் பங்குபெற வாய்ப்புக் கிடைத்தது.
- பல்வேறு கொள்கைகளையும் பல கட்சிகளையும் உடையவர்கள் நிர்வாகத்தில் பங்குபெற சந்தர்ப்பம் கிடைத்தது.
- சட்டங்களை உருவாக்குபவர்களுக்கு சட்டங்களை அமுல்படுத்துவதில் பங்கு இருத்தல் வேண்டும் என்ற இலங்கையரின் கோரிக்கையை நனவாக்கியது.
- இது பாராளுமன்ற ஜனநாயக அரசியலுக்கான கல்வியை ஊட்டக்கூடிய ஆரம்ப பாடசாலையாக இருந்தது.
- மந்திரி சபை பிற்காலத்தில் தோற்றம் பெறுவதற்கு அடித்தளமிட்டது.
- தனிப்பட்ட பிரதிநிதிகளின் முக்கியத்துவம் அதிகரித்தது. குறிப்பாக அரச கொள்கைகளில் தீர்மானம் எடுத்தல் அதனை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றில்
- தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் ஜனநாயகத் தன்மை இருந்தனை காண முடிகிறது.

ameen.ptm

நிர்வாகக் குழுமுறைக்கு எதிரான வாதங்கள்

- குறித்த விடயத்தை தீர்மானிக்கவும் நடைமுறைப்படுத்தவும் நிர்வாகக் குழு அதிகமான கால நேரத்தை எடுத்துக்கொண்டாது. அதாவது ஒரு விடயத்தை நிர்வாகக் குழு நுணுகி ஆய்வு செய்வதனாலும் அதே போன்று மந்திரி சபை, அரசாங்க சபை மற்றும் தேசாதிபதி என பல படித்தரங்களைக் கொண்டிருந்ததனாலும் அவ்விடயத்தை அமுல்படுத்துவதுக்கு காலதாமதம் ஏற்பட்டது.

- அரசியல் கட்சிமுறை காணப்படாததனால் தனிப்பட்ட உறுப்பினர்களின் செல்வாக்கு அளவுக்கதிகமான பலத்தைப் பெற்றனர். இதனால் பொதுக்கொள்கைகளை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

- ஒரு திணைக்களத்துக்கு பொறுப்பான நிர்வாகக்குழு மற்ற திணைக்களத்துக்குப் பொறுப்பான நிர்வாகக் குழுவின் செயற்பாடுகளில் தலையீடுகளைச் செலுத்தி கட்டுப்பாடுகளை மேற்கொண்டது.

- நிர்வாகக் குழுக்களுக்கிடையில் முறையான இரு இணைப்புக் காணப்பட வில்லை. இதனால் கொள்கை ரீதியான முரண்பாடுகள் ஏற்பட்டதுடன் சில் வேளைகளில் ஒரே விடயம் இரு நிர்வாகக் குழுக்களில் மேற்கொள்ளப்பட்டது.
- தேசாதிபதியும் அரசாங்க உத்தியோகத்தகர்களுகம் ஒரு குழுவாக இயங்க தெரிவுசெய்யப்ட்ட ஏனைய அங்கத்தவர்களும் மந்திரிமார்களும் ஒரு குழுவாகச் செயற்பட்டனர்.
- நிர்வாகக்குழுக்களின் கருத்து முரண்பாடுகளை தீர்ப்பதற்கு துணைக்குழு நியமிக்க வேண்டிய தேவையும் இருந்தது. இது வேலைப் பளுவை மேலும் அதிகரித்தது.

- அரசாங்க சபை உறுப்பினர்கள் தமது அரசியல் செல்வாக்கை பலப்படுத்திக கொள்வதற்காக தகுதியற்றோருக்கு நியமனம் வழங்க தலையீடுகளைச் செலுத்தினார்கள்.

- நிர்வாகக் குழுவுக்கு பொறுப்புக்கள் அதிகமாக இருந்த போதும் ஒவ்வொரு நிர்வாகக் கூட்டத்திலும் வேலைப்பளு நிறைந்த நிகழ்ச்சி நிரல் காணப்பட்டது. இதனால் நிர்வாகக் குழு தினமும் கூட வேண்டிய நிலை ஏற்பட்டது.

- சிறுபான்மை இனத்துக்கு நிர்வாகக் குழுமுறை மூலம் போதிய சேவையையும் பிரதிநிதித்துவத்தையும் மற்றும் பாதுகாப்பையும் பெற்றுக்கொடுக்க முடியாமல் போனது.

- முழு நிர்வாகமும் இலங்கையரிடம் ஒப்படைக்கப்பட வில்லை. பிரதானமான நிர்வாக முறைகள் 3 காரியதரிசிகளிடம் ஒப்படைக்கப்ட்டன. அத்துறைகள் முக்கியமானவைகளாகவும் கட்டுப்படுத்தக்கூடியதாகவும் இருந்தது மட்டுமன்றி இவர்கள் மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய தேவையும் இல்லை.

ameen.ptm

- நிர்வாகக் குழுவில் தலைவராக தெரிவுசெய்யப்பட்டவரே அமைச்சராக தேசாதிபதியால் நியமிக்கப்படுவார்.
- ஏழு நிர்வாகக் குழுக்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட 7 நிர்வாகத் தலைவர்களையும் 3 காரியதரிசிகளையும் உள்ளடக்கியதாக மந்திரிசபை காணப்பட்டது.
- பிரதம காரியதரிசி மந்திரிசபையின் தலைவராக செயற்பட்டார்.
- அரசாங்க சபையின் முதல்வர் மந்திரிசபையின் உபதலைவராக இருப்பார்.
- மந்திரி சபையின் கூட்டங்கள் அதன் தலைவரால் கூட்டப்படும்.
- அமைச்சரவைக் கூட்டத்துக்கு 6 உறுப்பினர்கள் குறைந்தது சமூகமளிக்க வேண்டும் இவர்களில் குறைந்தது 3 அமைச்சர்களும் மற்றும் 3 காரியதரிசிகளும் உள்ளடங்குவர்.
- அமைச்சரவைக் கூட்டத்தின் போது ஏதாவது ஒரு திணைக்களத்தின் தலைவரின் உதவி தேவைப்படும் போது அவரை அழைக்கும் அதிகாரம் அமைச்சரவைக்கு உண்டு.

மந்திரிசபையின் பணிகள்

- திணைக்களங்களை மேற்பார்வை செய்வதற்கும் கட்டளையிடுவதற்கும் அமைச்சருக்கு அதிகாரம் உண்டு.
- அமைச்சரவை வரவு - செலவு திட்டத்தில் மட்டும் கூட்டுப்பொறுப்புடன் செயற்பட்டது.
- அரசாங்க சபையில் விவாதிக்க வேண்டிய விடயங்களை ஒழுங்குபடுத்தல் , வரவு செலவு திட்டம் தயாரித்தல் என்பன மந்திரி சபையின் கடமைகளாகும்.
- வரவு செலவு திட்டம் தயாரிப்பதற்கு ஒவ்வொரு அமைச்சரும் தமது திணைக்களத்தின் செலவு விவரங்களையும் வருமாணக் காணக்கெடுப்பு விபரங்களையும் அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.
- இவ்விபரங்கைள எல்லாம் கவனத்தில் கொண்டு அமைச்சரவை வரவு செலவு திட்டத்தை தயாரித்து உப தலைவரினூடாக அரசாங்க சபைக்கு சமர்ப்பிக்கும் பின்னர் அச்சபை திருத்தங்களையும் மாற்றங்ளையும் செய்து ஏற்றுக்கொள்ளும் அல்லது மாற்றம் எதுவும் செய்யாது ஏற்றுக்கொள்ளும் அல்லது மந்திரிசபையின் புனர் ஆலோசனைக்காக மீண்டும் அனுப்பும்.
- புனர் ஆலோசனைக்காக அனுப்பப்பட்ட வரவு செலவுத் திட்டம் மீண்டும் அரசாங்க சபைக்கு வந்து அரசாங்க சபையால் நிராகரிக்கப்பட்டால் தேசாதிபதி அரசாங்க சபையை கலைத்துவிடுவார்.
- மந்திரி சபையிலிருந்த 3 காரியதரிசிகளும் உப மந்திரி சபையாக செயற்பட்டனர்.
- இவர்கள் மந்திரிசபையில் ஒரே கருத்தில் இருப்பதுடன் மந்திரிசபை கூடுவதற்கு முன்னர் தாங்கள் கூடி ஆலோசனை செய்து முடிவுகளையும் எடுத்துக்கொள்வார்கள்.

ameen.ptm

மந்திரி சபையின் நன்மைகள்

- இலங்கையர்கள் நீண்டகாலமாக மந்திரிசபை அரசாங்க முறையினை வேண்டி நின்றனர் இது அதன் ஆரம்ப மைல் கல்லாக இருந்தது.
- மந்திரிசபை அரசாங்க முறை தொடர்பாக இலங்கையர்கள் பயிற்சிகளை பெற்றுக்கொள்ள முடிந்தது.
- ஆரம்ப காலங்களில் அரசாங்க காரியதரிசிகளுடன் அமைச்சர்கள் முரண்பட்டு இருந்தாலும் பிற்காலத்தில் சுமுகமான உறவைப் பேணி தம்முடைய கருமங்களை சிறந்த வகையில் செயற்படக்கூடியவர்களாக இருந்தனர்.
- பிற்காலத்தில் நிதிக் காரியதரிசியாக இலங்கையர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டார்.

மந்திரி சபையின் குறைபாடுகள்

- மக்களால் தெரிவு செய்யப்படாத பிரதம காரியதரிசி அமைச்சரவைக்கு தலைமை தாங்கியது பொருத்தமான ஒன்றாக அமைய வில்லை. மக்களால் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்கு பொறுப்புக் கூறக்கூடிய ஒருவர் மந்திரிசபைக்கு தலைமை தாங்குவது பொருத்தமானதாகும்.

- 3 காரியதரிசிகளுக்கும் மிகவும் முக்கியமான துறைகள் வழங்கப்பட்டது பொருத்தமற்றதாகும். இதனால் ஏனைய துறைகள் சுமுகமாக இயங்குவதற்கு பெரும் தடையாக அமைநத்து.

- மந்திரி சபை கூட்டுப்பொறுப்புடன் செயற்பட வில்லை.
- 3 காரியதரிசிகளும் உப மந்திரிசபையாக செயற்பட்டமை மந்திரிசபையின் இயக்கத்துக்கு பெரும் தடையாகக் காணப்பட்டது.

- மந்திரிசபை இரட்டைத் தன்மை கொண்டதாக காணப்பட்டது அதாவது 7 மந்திரிகளும் ஒரு பிரிவாகவும் 3 காரியதரிசிகளும் ஒரு பிரிவாகவும் செயற்பட்டனர்.

- மந்திர்சபையின் மசோதா அரசாங்க சபையால் நிராகரிக்கப்பட்டால் அமைச்சர்கள் இராஜினாமா செய்ய வேண்டும் என்ற முறை காணப்பட வில்லை மாறாக வரவு செலவு திட்டம் நிராகரிக்கப்பட்டால் மந்திரிசபை பதவி விலக வேண்டும் என்ற ஏற்பாடு காணப்பட்டது.

- வரவு செலவு மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும் போது பொதுக்கொள்கையின் படி மேற்கொள்ளப்பட வில்லை மாறா தமது தனிப்பட்ட செயற்பாடுகள் இதில் இடம்பெற்றன.

Ameen.ptm

- டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் படி தேசாதிபதி என்பவர் இலங்கை அரசின் தலைவராக காணப்பட்டார்.
- இவர் பிரித்தானிய முடிக்குரிய இலங்கை பிரதிநிதியாக விளங்கினார். பிரித்தானியா குடியேற்ற நாட்டுக்குக் கட்டுப்பட்டவராகவும் அங்கு பொறுப்புக் கூறக்கூடியவராகவும் காணப்பட்டார்.
- இவர் பிரித்தானிய முடியினால் நியமிக்கப்படுவார்.
- இவரது பதவிக்காலம் வரையறுக்கப்பட வில்லை. பிரித்தானிய முடி விரும்பும் காலம் வரை பதவியில் இருக்க முடியும்.

தேசாதிபதியின் சட்டத்துறை தொடர்பான அதிகாரங்கள்

- அரசாங்க சபையினால் இயற்றப்படும் சட்டங்களுக்கு சம்மதம் தெரிவித்து கையொப்பமிடும் அதிகாரம் காணப்படுகிறது.
- அரசாங்க சபையால் கொண்டு செல்லப்படும் சட்டங்களுக்கு பின்வரும் முடிவுகளை தேசாதிபதி முன்வைக்க முடியும்.
  - ✓ தான் விரும்பிய சட்டங்களுக்கு கையொப்பம் இடமுடியும்.
  - ✓ தான் விரும்பாத சட்டங்களுக்கு கையொப்பமிட மறுக்கலாம். அல்லது மீள் பரிசீலனைக்காக திரும்பியனுப்பலாம் அல்லது ஒத்தி வைக்கலாம்.
  - ✓ சில மசோதாக்களை மன்னரின் அனுமதி பெற வேண்டும் என தடுத்து வைக்கலாம்.
  - ✓ செல்லுபடியாகும் காலத்தை 6 மாதகாலத்திற்கு தாமதப்படுத்தலாம்.
  - ✓ அல்லது 2/3 பெரும்பான்மை பெற வேண்டும் என்று திருப்பியனுப்பலாம்.

- அவசர நிலையின் போது சட்ட ஆக்கம் முழுவதையும் தேசாதிபதி தன்வசம் எடுத்துக்கொள்ள முடியும்.
- அவசர நிலை காணப்படாத காலங்களிலும் கூட அரசாங்க சபையின் அனுமதியுடன் சட்டங்களை ஆக்க முடியும்.
- அரசாங்க சபையை கூட்டுதல், கலைத்தல் மற்றும் ஒத்திவைத்தல் போன்ற அதிகாரங்கள் உண்டு.
- அரசாங்க சபையில் சிம்மாசன உரையை நிகழ்த்துதல்.
- அரசாங்க சபைக்கான நியமன உறுப்பினர்களை நியமித்தல்.
- அரசாங்க சபையின் புதிய தவணைகளை ஆரம்பித்து வைத்தல்
- பொதுச் சட்டம், சிறந்த ஆட்சி என்பவற்றை நிலை நிறுத்த வேண்டுமெனில் தமது விருப்பப்படி அரசாங்க சபையின் அனுமதியின்றி சட்டங்களை ஆக்க முடியும்.

போன்ற அதிகாரங்கள் காணப்படுகின்றன

Ameen.ptm

நிர்வாகத்துறை தொடர்பான அதிகாரங்கள்

- நிர்வாகக் கொள்கைகள் நிர்வாக நடவடிக்கைகள் போன்றவற்றில் பிரதான நபராக காணப்படுகிறார்.
- நிர்வாகக் குழுக்கள் 7 க்கும் ஒப்படைக்கப்பட்ட துறைகளைத் தவிர ஏனைய துறைகள் தேசாதிபதியின் கட்டுப்பாட்டினுள் காணப்பட்டது.
- தனது பொறுப்பில் உள்ள துறைகளை 3 காரியதரிசகளுக்கு ஒப்படைத்த போதும் 3 காரிதரிசிகளும் தேசாதிபதிக்கு பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளனர்.
- மந்திரிமார்களை அங்கிகரித்தல்.
- நாட்டின் பொது இலட்சிணையை வைத்திருத்தல்.
- காணி, நன்கொடை வழங்குதல்
- முப்படைத் தளபதிகளை நியமித்தல்.
- சம்பிரதாய விழாக்களில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்துகொள்ளுதல்.
- பிரதம காரியதரிசின் ஆலோசனையின் பேரில் உள்நாட்டு, வெளிநாட்டு அலுவல்களை மேற்கொள்ளுதல்.
- மந்திரிமார்களின் கடமைகளை மேற்பார்வை செய்தல்.
- முப்படைகளுக்கு தளபதியாக இருத்தல்.
- பிரித்தானிய முடியின் வேண்டுகோளுக்கு இணங்க அதிகாரிகளை நியமித்தல்.
- இடமாற்றம் செய்தல்.
- ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளுதல்.
- அவசரநிலையின் போது தேவையான திணைக்களத்தின் அதிகாரத்தை தம் கையில் எடுத்தல்.

போன்ற அதிகாரங்கள் காணப்படுகின்றன

நீதித்துறை தொடர்பான அதிகாரங்கள்

- முக்கிய நீதிபதிகளை நியமித்தல்.
- சட்ட காரியதரிசின் ஆலோசனைக்கு ஏற்ப குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதல்.
- தண்டனைகளைக் குறைத்தல்.

போன்ற அதிகாரங்கள் காணப்படுகின்றன.

நன்மைகள்

- இவரது அதிகாரம் சிறுபான்மை இனத்துக்கு சாதகமானதாக கொண்டுவரப்பட்டது.
- பொறுப்பாட்சி முழுமையாக இல்லாத போது அதிகாரமுடைய தலைவர் ஒருவர் தேவைப்பட்டார் தேசாதிபதி பதவி இதனை பூர்த்தி செய்தது.
- பல்லின கலாசாரம் கொண்ட நாட்டில் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பிரதான கருத்தாவாக செயற்பட்டார்.
- முன்னைய அதிகாரத்தை விட தேசாதிபதியின் அதிகாரம் குறைக்கப்பட்டதானது இலங்கையர்கள் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது.

ameen.ptm

குறைபாடுகள்

- ❖ அதிகாரம் கூடிய பதவிகளுக்கு மக்களால் தெரிவு செய்யப்படாது பிரித்தானிய முடியால் தெரிவு செய்யப்பட்டவர் நியமிப்பதானது மக்களாட்சிக் கோட்பாட்டுக்கு தடையாக உள்ளது.
- ❖ சட்டத்துறை சம்மந்தமாக தேசாதிபதிக்கு காணப்படும் அதிகாரம் அரசாங்க சபையின் இறைமையை பாதிக்கின்றது.
- ❖ நிர்வாகத் துறை தொடர்பாக 3 காரியதரிசிகளுக்கும் காணப்படும் அதிகாரமானது நிர்வாகக்குழுக்களின் தலைவர்கள் கடமையாற்றுவதற்கு தடையாகக் காணப்பட்டது.

07 மூன்று காரியதரிசிகள்

- ➢ டொனமூர் அரசியல் திட்டத்தில் அமைந்த அரசாங்க சபைக்கு ஆலோசனை வழங்குவதற்காக உருவாக்கப்பட்டதே இப்பதவியாகும்.
- ➢ இங்கு 3 காரிதரிசிகள் காணப்படுவார்கள் முறையே
    1. பிரதம காரியதரிசி
    2. சட்டக்காரிதரிசி
    3. நிதிக்காரிதரிசி
- ➢ இவர்கள் மூவரும் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.
- ➢ இவர்கள் தேசாதிபதிக்கே நேரடியாக பொறுப்புச் சொல்லக்கூடியவர்களாக இருந்தனர்.
- ➢ இவர்கள் பொறுப்பில் மிக முக்கியமான மூன்று துறைகள் இருந்தன.
- ➢ இம்மூவரும் தாங்கள் சார்ந்த பொறுப்புக்கள் தொடர்பாக மக்களுக்குப் பொறுப்புச்சொல்ல வேண்டிய தேவை இல்லை இதனால் ஏகாதிபத்தியத்தின் நலன் காப்பவர்களாக இருந்தனர்.
- ➢ இதனால் இவர்களை டொனமூர் அரசியல் திட்டத்தின் **காவல் நாய்கள்** என வர்ணிக்கப்பட்டனர்.
- ➢ தேசாதிபதிக்கும் அமைச்சரவைக்கும் மற்றும் நிர்வாகக் குழுக்களுக்கும் ஆலோசனை வழங்குவதே இவர்களின் பணி என யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ➢ அமைச்சர்களாக இருந்ததோடு அரசாங்க சபையின் உறுப்பினர்களாக இருந்தனர்.
- ➢ நிர்வாகக்குழுக் கூட்டத்தில் இவர்கள் பங்குபற்றினர். பங்குபற்றாத சந்தர்ப்பத்தில் தமது பிரதிநிதிகளை அனுப்பிவைத்தனர்.

பிரதம காரியதரிசியின் கடமைகள்

- ❖ இம்மூன்று காரியதரிசிலும் பொறுப்பு அதிகமானவராக இவர் காணப்பட்டார்.
- ❖ தேசாதபதிக்கு அடுத்தபடியான அதிகாரங்கள் இவரிடம் காணப்பட்டது.
- ❖ தேசாதிபதி இல்லாத சந்தர்ப்பத்தில் பதில் தேசாதிபதியாக இவரே கடமையாற்றவார்.
- ❖ தேசாதிபதிக்கும் மந்திரிமார்களுக்கும் அவர்களது கடமைகள் தொடர்பாக ஆலோசனை வழங்குவது இவரின் கடமையாகும்.
- ❖ பகிரங்கசேவை, பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள் போன்ற துறைகள் இவரின் கட்டுப்பாட்டில் இருந்தன.

Ameen.ptm

நிதிக் காரியதரிசியின் கடமைகள்

- இவர் நிதி தொடர்பான விடயங்களுக்கு பொறுப்பாக்கப்பட்டிருந்தார்.
- அரச திணைக்களங்களின் நிதி நிலைமைகளை மேற்பார்வை செய்தல்.
- திணைக்களங்களுக்குத் தேவையான நிதியினை ஒதுக்குதல்
- வரவு செலவு திட்டத்தைத் தயாரித்தல்.
- அரசாங்க ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குதல்.
- அலுவலக விடயங்கள், ஆலோசனை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்ற அடிப்பபையில் இவரது கடமைகள் இருந்தன.

- **அலுவலக விடயங்கள் எனும் போது**
  - ✓ நிதி தொடர்பான அறிக்கைகளைத் தயாரித்தல்
  - ✓ மேலதிக பணத்தை சேகரித்து வைததல்.
  - ✓ அரசாங்த்தினி வரவு செலவுகளை அறிக்கையாக்குதல்.
  - ✓ அரசாங்க திணைக்களங்களின் வரவு செலவு திட்டங்களைத் தயாரித்தல்
  - ✓ பணம் அச்சிடுதல்.

- **ஆலோசனை எனும் போது**
  - ✓ வரி, வருமாண விடயங்களில் மாற்றங்கைள திருத்தங்களை மேற்கொள்ளதல்
  - ✓ செலவுத்திட்டங்கள், கடன்வாங்குதல் மற்றும் மேலதிக செலவுகள்

போன்ற விடயங்களில் ஆலோசனை வழங்குவது இவரின் கடமைகளாகும்.

- **மேற்பார்வை செய்தல் எனும் போது**
  - ✓ அனைத்து திணைக்களங்களினதும் வரவு செலவுகளை மேற்பார்வை செய்தல ஒப்பந்தங்கள் குத்தகைகள் போன்றவற்றை மேற்பார்வை செய்தல்
  - ✓ உத்தியோகத்தகர்களின் சம்பளம், உபகாரச் சம்பளம் மற்றும் பிரயாணச் சலுகைகள் போன்றவற்றை மேற்பார்வை செய்தல.
  - ✓ புகையிரதப் பிரயாணச் சீட்டின் விலை தயாரித்தலை கண்காணித்தல் இவரது படமைகளாகும்
- ஆரம்பகாலத்திலிருந்து ஆங்கிலேயர் நிதிக்காரியதரிசியாக இருந்தார் 2 ஆம் மகா யுத்தத்தை தொடர்ந்து **சேர் ஒலிவர் குணத்திலக** இலங்கை நிதிக் காரியதரிசயாக நியமிக்கப்பட்டார்

சட்டக் காரியதரிசியின் கடமைகள்

- இவர் நீதி தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பாக இருந்தார்.
- நீதி தொடர்பான விடயங்களில் ஆலோசனை வழங்குவதே இவரின் பிரதான கடமையாகும்
- அரசின் பெயரால் வழக்குகளை நடாத்துதல்.
- அரசாங்க சபைத் தேர்தலை நடாத்துதல்.
- சட்டங்களை வரைதல்.
- 3 காரியதரிசிகளுக்குப் பொறுப்பாக்கப்பட்ட துறைகள் தவிர் ஏனைய அனைத்து துறைகளும் இவரின் கட்டுப்பாட்டிலயே காணப்பட்டன.
- தேசாதிபதிக்கும் மந்தரிசபைக்கும் ஆலோசனை வழங்கக்கூடியவராக இருந்தார்.

போன்றன இவரது கடமைகளாகும்.

ameen.ptm

நன்மைகள்

- இலங்கை அரசியல் தலைவர்கள் பயிற்சிக் காலத்தில் இருந்ததனால் முக்கிய பொறுப்புக்கள் 3 காரியதரிசியிடம் வகித்தமை ஏற்கக்கூடியதாக இருந்தமை.
- காரியதரிசிகள் பிறகாலத்தில் ஏனைய மந்திரிமார்களுடன் இணக்கமாக செயற்பட்டனர்.

தீமைகள்

- முக்கிய பொறுப்புக்கள் 3 காரியதரிசியிடம் வகித்தமையால் ஏனையோருக்கு தமது பொறுப்புக்களை மேற்கொள்வது கடினமாக இருந்தது.
- பொறுப்புக்கள் இருந்த இடத்தில் அதிகாரம் இருக்கவில்லை அதே போன்ற அதிகாரம் இருந்த இடத்தில் பொறுப்புக்கள் இருக்க வில்லை.

08 பொதுச்சேவை, நீதிச் சேவை ஆணைக்குழுக்கள்

- அரசாங்க உத்தியோகத்தகர்களது நியமனம், இடமாற்றம், பதவியுயர்வு , பதவி நீக்கம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் என்பவற்றுக்கு பொறுப்பாக உருவாக்கப்பட்ட குழுவே இவ்வாணைக்குழுவாகும்.
- பொதுச்சேவை தொடர்பா அமைச்சருக்கும் தேசாதிபதிக்கும் ஆலோசனை வழங்குவது இதன் கடமையாகும்.

- இவ்வாணைக்குழு 3 அங்கத்தவர்களைக் கொண்டது.
- இவ் மூவரும் தேசாதிபதியால் நியமிக்கப்படுவர்.
- பிரதம காரியதரிசியின் இவ்வாணைக்குழுவின் தலைவராவர்.
- இதன் பதவிக்காலம் 5 வருடங்களாகும்.
- பொதுச்சேவை தொடர்பாக கருமமாற்றும் போது இன,மத, சமூக மற்றும் அரசியல் ரீதியான பாரபட்சம் காட்டக்கூடாது என்பதற்காக இது உருவாக்கப்பட்டது.

டொனமூர் அரசியல் திட்டம்

- டொனமூர் அரசியல் திட்டமானது இலங்கையருக்கு பத்தில் ஏழு பகுதி பொறுப்பாட்சியை வழங்கியது என்ற கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது.
- இத்திட்டம் இலங்கையர் பயிற்சி பெறுவதற்கு ஓர் இடைக்காலத்திட்டமாக காணப்பட்டது.
- இலங்கை அரசியல் திட்டத்துக்கு ஒரு முக்கியமான கட்டமாக இருந்தது.
- மக்கள் பிரதிநிதிகள் சட்ட நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது.
- தாரண்மை ஜனநாயகத்தின் பெரும் பகுதிகளை நிறைவேற்றியது.